www.Padasalai.Net www.CBSEtips.in

KANCHIPURAM DT

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg No.

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்
2. முக மதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் க/கு
   இ) பங்கு முதல் க/கு ஈ) பங்கு ஒறுப்பிழப்பு க/கு
3. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் க/கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்து க/கு
   இ) பங்கு முதல் க/கு ஈ) வங்கி க/கு
4. இருப்புநிலைக் குறிப்பு வணிக நிறுவனத்தின் நிதி நிலையைப் பற்றி ______ தகவல்களை வழங்குகிறது.
   அ) ஒரு காலக் கட்டத்திற்கு மேலான ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
   இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய
5. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகால சொத்துகள்
6. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில் நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில் நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு
   அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100
7. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
   இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்ட கால தகவல்கள்
8. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
   அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்
9. புற அக பொறுப்புகள் அளவிடுவது
   அ) குறுகிய கால கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகால கடன் தீர்க்கும் திறன்
   இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல்திறன்
10. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத் தொகை ₹2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை
    அ) 700 ஆ) 800 இ) 900 ஈ) 1000

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - ஆ

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா)** 5 x 2 = 10

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. விரைவு விகிதம் என்றால் என்ன?
13. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகிறது?
14. நிதிநிலை அறிக்கைகள் யாவை?
15. நடைமுறை முதல் என்றால் என்ன?
16. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?
17. சாரா நிறுமம் பங்கொன்று ₹10 வீதம் 10000 நேர்மைப் பங்குகளை ₹2 முனைமத்தில் விண்ணப்பத்தின்போது முழு தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

## பகுதி - இ

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 24 கட்டாய வினா)** 5 x 3 = 15

18. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.
19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையவும்.
20. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?
21. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.
22. இராஜா என்பவர் ₹10 மதிப்புள்ள 50 நேர்மைப் பங்குகளை தன் வசம் வைத்துள்ளார். அவர் அதற்தென விண்ணப்பத்தின் மீது ₹2 செலுத்தியுள்ளார். ஆனால் ஒதுக்கீட்டின் மீது ₹4 மற்றும் முதலாவது அழைப்பின் மீது ₹2 செலுத்தவில்லை. முதலாவது அழைப்பிற்கு பின் இயக்குனர்கள் பங்கினை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பு செய்த பங்குகளுக்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.
23. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தை கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| மொத்த நடப்பு பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்பு சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 15,000 |

24. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயாரிக்கவும்.

| *விவரம்* | *2015-16 (₹)* | *2016-17 (₹)* |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 5 = 15

25. அ) ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன? *(அல்லது)*

ஆ) புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்கொன்று ₹10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹2, ஒதுக்கீட்டின் போது ₹4, முதலாவது அழைப்பின் போது ₹2, இரண்டாவது அழைப்பின் போது ₹2 செலுத்தப்பட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பபட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

26. அ) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும். *(அல்லது)*

ஆ) முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

| *விவரம்* | *2017 மார்ச் 31 (₹)* | *2018 மார்ச் 31 (₹)* |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| **மொத்தம்** | **6,25,000** | **6,87,500** |
| II. சொத்துகள் | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| **மொத்தம்** | **6,25,000** | **6,87,500** |

27. அ) நிவேதா வரையறு நிறுமம் ₹10 மதிப்பிலான 1000 நேர்மைப் பங்குகளை, அழைப்பு தொகை பங்கொன்றுக்கு ₹4 வீதம் செலுத்தவில்லை என ஒறுப்பிழப்பு செய்தது. இதில் பங்கு ஒன்றிற்கு ₹7 வீதம் 800 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறு வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும். *(அல்லது)*

ஆ) சாம் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| *விவரம்* | *2015-16 (₹)* | *2016-17 (₹)* |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இதர வருமானம் | 80,000 | 50,000 |
| செலவுகள் | 2,40,000 | 2,50,000 |
| வருமான வரி | 30% | 30% |

***/***

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

காஞ்சிபுரம், கடலூர், தேனி, திருவாரூர், மயிலாடுதுறை, திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள்

# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2023

## 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | ஈ | காப்பு முதல் |
| 2 | அ | பத்திர முனைமக் கணக்கு |
| 3 | இ | பங்கு முதல் க/கு |
| 4 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய |
| 5 | ஆ | நடைமுறை முதல் |
| 6 | இ | 25 |
| 7 | அ | பணம் சாரா தகவல்கள் |
| 8 | ஆ | விகிதம் |
| 9 | ஆ | நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| 10 | அ | 700 |

### பகுதி --- ஆ

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

**11. மிகை ஒப்பம் என்றால் என்ன?**

- வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

**12. விரைவு விகிதம் என்றால் என்ன?**

- விரைவு விகிதம் என்பது , நீர்மைச் சொத்துகளுக்கும், நடப்புப் பொறுப்புகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் ஆகும்.

**13. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?**

- பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

**14. நிதிநிலை அறிக்கைகள் யாவை?**

- ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே, நிதிநிலை அறிக்கைகள் ஆகும்.
- வியாபார நிறுவனங்களால் தயாரிக்கப்படும், வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை அடிப்படை நிதிநிலை அறிக்கைகளாகும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**15. நடைமுறை முதல் என்றால் என்ன?**

- நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புகளைவிட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்.

**16. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?**

- விகிதம் என்பது, இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றை ஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவது ஆகும்.
- விகிதங்கள், கணக்கியல் தகவல்களின் அடிப்படையில் கணக்கிடப்படும் போது, அவை கணக்கியல் விகிதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**17.** <u>சாரா நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 10,000 x 12 ) | ப | | 1,20,000 | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு | | | | 1,20,000 |
| | ( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு | ப | | 1,20,000 | |
| | நேர்மைப் பங்கு முதல் க/கு ( 10,000 x 10 ) | | | | 1,00,000 |
| | பத்திர முனைமம் க/கு ( 10,000 x 2 ) | | | | 20,000 |
| | ( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | | | |

## <u>பகுதி - இ</u>

<u>எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்</u>. $5 \times 3 = 15$

**18. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.**

- பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பைவிட, அதிகமாகப் பெறப்பட்ட தொகை, அழைப்பு முன்பணம் எனப்படும்.
- இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.
- அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை, திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும்.

**19. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையவும்.**

- ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்பது, ரொக்க ஓட்ட அறிக்கை, தயாரிப்பதைக் குறிக்கும்.
- இது ஒரு குறிப்பிட்ட காலத்தில், உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும்.
- ரொக்கம் என்பது, கைரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது.
- ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது, குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய, குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**20. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?**

- நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும்போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடுவதையே, ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு எனப்படுகின்றது.

**21. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.**

**பத்தி 1 -** வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

**பத்தி 2 -** தொகையினைப் பதிவு செய்யவும்.

**பத்தி 3 -** பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது, வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக் குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக் குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக் கொள்ளப்படலாம். பத்தி 2 - ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3 -ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

**<u>பொது அளவு அறிக்கையின் படிவம்</u>**

| விவரம் | தொகை (₹) | சதவீதம் |
|---|---|---|
| | | |

22. **<u>இராஜ என்பவரின் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | நேர்மைப் பங்கு முதல் க/கு ( 50 x 8 ) ப | | 400 | |
| | நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 50 x 4 ) | | | 200 |
| | நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு ( 50 x 2 ) | | | 100 |
| | நேர்மைப் பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 50 x 2 ) | | | 100 |
| | ( பங்குகள் ஒறுப்பிழப்பு செய்தது ) | | | |

23.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்பு பொறுப்புகள்}}$$

நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் - சரக்கிருப்பு - முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

= 2,50,000 - 50,000 - 15,000 = ₹. 1,85,000

$$\text{விரைவு விகிதம்} = \frac{1,85,000}{1,00,000} = 1.85 : 1$$

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

24.

**அருள் வரையறு நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஒப்புநோக்கும் ஆண்டுக்குரிய வருமான அறிக்கை**

| விவரம் | 2015 - 2016 ₹. | 2016 - 2017 ₹. | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) ₹. | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் வருவாய் | 50,000 | 60,000 | + 10,000 | + 20 |
| கூட்டுக :இதர வருமானம் | 10,000 | 30,000 | + 20,000 | + 200 |
| மொத்த வருமானங்கள் | 60,000 | 90,000 | + 30,000 | + 50 |
| கழிக்க : செலவுகள் | 40,000 | 50,000 | + 10,000 | + 25 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | **20,000** | **40,000** | **+ 20,000** | + 100 |

## பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) **ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?**

- ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம்.
- அப்பங்குகள், எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம்.
- ஆனால், வெளியீட்டு விலை, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.

( அல்லது )

25. ஆ) **புராகிரஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 50,000 x 2 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு (50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 50,000 x 4 ) ப<br>பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 2,00,000 | 2,00,000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு (50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு இரண்டாவது அழைப்பு க/கு(50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இரண்டாவது அழைப்பு க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |

25.அ) **ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.**

பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும், இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்டவும். 2- ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும், மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இடவேண்டும்.

பத்தி 5 : 4 - ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை, இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4 - ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

**ஒப்பு நோக்கு அறிக்கையின் படிவம்**

| விவரம் | ஆண்டு 1 | ஆண்டு 2 | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–) |
|---|---|---|---|---|
| | ₹ | ₹ | ₹ | |
| (1) | (2) | (3) | (4) | (5) |

( அல்லது )

26. ஆ) முத்து வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மாரச் 31 ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்பு நிலைக்குறிப்பு

| விவரம் | 2016 - 2017 | 2017 - 2018 | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| | ₹. | ₹. | ₹. | |
| 1. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 | + 40,000 | + 10 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 | + 15,000 | + 10 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 | + 7,500 | + 10 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |
| 2. **சொத்துகள்** | | | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 | + 1,00,000 | + 20 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 | - 37,500 | - 30 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |

27. அ) நிவேதா வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | நேர்மை பங்கு முதல் க/கு ( 1,000 x 10 ) ப<br>நேர்மை பங்கு இறுதி அழைப்பு க/கு ( 1,000 x 4 )<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1,000 x 6 )<br>(1,000 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது ) | | 10,000 | 4,000<br>6,000 |
| | வங்கி க/கு ( 800 x 7 ) ப<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ( 800 x 3 ) ப<br>பங்கு முதல் க/கு ( 800 x 10 )<br>( ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட 800 பங்குகள் ₹. 7 வீதம் மறு வெளியீடு செய்யப்பட்டது ) | | 5,600<br>2,400 | 8,000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப<br>முதலினக் காப்பு க/கு<br>( மறுவெளியீட்டின் இலாபம் முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது ) | | 2,400 | 2,400 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

( அல்லது )

27. ஆ) **சாம் வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மாரச் 31 ஆம் ஆண்டுக்குரிய பொது அளவு வருவாய் அறிக்கை**

| விவரம் | 2015 - 2016 | | 2016 - 2017 | |
|---|---|---|---|---|
| | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதம் |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 100 | 5,00,000 | 100 |
| கூட்டுக : இதர வருமானம் | 80,000 | 20 | 50,000 | 10 |
| மொத்த வருவாய் | 4,80,000 | 120 | 5,50,000 | 110 |
| கழிக்க : செலவுகள் | 2,40,000 | 60 | 2,50,000 | 50 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் / நட்டம் | 2,40,000 | 60 | 3,00,000 | 60 |
| கழிக்க : வருமான வரி (30%) | 72,000 | 18 | 90,000 | 18 |
| **வரிக்கு பின்னர் உள்ள இலாபம்** | **1,68,000** | **42** | **2,10,000** | **42** |

www.Padasalai.Net

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613